KANTON AARGAU

**Departement**
**Bildung, Kultur und Sport**
Abteilung Volksschule

Sektion Organisation und Entwicklung
Interkulturelle Erziehung
Bachstrasse 15, 5001 Aarau
Internet www.ag.ch/bks

நவம்பர் 2006

# என் பிள்ளையை வாசிக்கும் பழக்கத்தினால் சந்தோசமடைய வைக்க எப்படி உதவுவேன்?
# பெற்றோர்களுகாக சில குறிப்புகளின் தொகுப்பு

பாசல் மாநிலத்தின் பாடசாலைப் பரிசோதகர்களால் தயாரிக்கப்பட்ட சில குறிப்புகள்

பிள்ளைகளை நிரந்தர வாசிப்புப் பழக்கத்திற்கு கொண்டுவர பெற்றோர் மிகுந்த கவனமெடுத்து ஊக்கம் கொடுக்கவேண்டியது ஒரு நீண்ட கால முயற்சியாகும். ஒரு நல்ல வாசிப்புப் பழக்கம் உங்கள் பிள்ளையின் படிப்புத்திறனைக் கூட்டும்.

**டொச் உங்கள் தாய்மொழி இல்லாத போது?**

உங்களுக்கு டொச் மொழி நன்றாகவோ, ஓரளவோ தெரியாதபோதும் கூட உங்கள் பிள்ளைகளை வாசிப்பதற்கு ஊக்கம் கொடுத்து உதவலாம். இதில் மிக மிக முக்கியம் என்னவெனில் உங்களுக்கு என்ன மொழி சரளமாக வருகிறதோ அம் மொழியில் உங்கள் பிள்ளைகளை பேசவும் எழுதவும் தூண்டலாம். அது சாதாரணமாக உங்கள் தாய்மொழி. தாய்மொழியில் நன்றாக பேசவும் வாசிக்கவும் தெரிந்தால், டொச் மொழியில் பேசுவதும் வாசிப்பதும் இலகுவாக இருக்கும்.

கீழுள்ள 7 எண்ணக்குறிப்புகளும் உங்கள் பிள்ளைக்கு எப்படி உதவலாம் என்பதைக் குறிக்கிறது.

## குறிப்பு 1: உங்கள் பிள்ளையுடன் பேசுங்கள்

பேசும் மொழிதான் வாசிப்பதற்கு அடிப்படையாக உள்ளது. மொழியைக் கேட்பதும், பேசுவதும் மொழி அறிவை கூட்டும். பேசுவதன் மூலமும் பாடுவதன் மூலமும் பிள்ளை தன் மொழி உச்சரிப்பை வெளிப்படுத்துகிறது. இதனால் பிள்ளையின் வாசிக்கும்திறன் இலகுவாகும். கீழுள்ள விடயங்கள் உங்கள் பிள்ளையின் பேச்சுத்திறனை ஊக்குவிக்க உதவும்.

- உங்களைப் பற்றி, பாட்டன் பாட்டி பற்றி, உறவினர்களைப் பற்றிய குடும்பக்கதைகளைப் பிள்ளைகளிடம் சொல்லுங்கள்.
- பிள்ளைகள் செய்யவேண்டிய, நினைக்க வேண்டிய விடயங்களைப் பற்றி பிள்ளைகளுடன் கலந்து பேசுங்கள்.
- அவர்களிடம் கேள்விகளைக் கேளுங்கள்.
- பிள்ளைகளை நினைப்பதை அவர்களின் உணர்வுகளை வெளிப்படுத்தி விபரிக்கப் பழக்குங்கள்.
- அவர்களின் நாளாந்த அனுபவங்களை அவர்களாகவே விபரிக்கச் செய்யுங்கள்.
- பேசும் போது உங்கள் பிள்ளைகளுக்கு நேரம் கொடுத்து அவர்கள் நினைப்பதை, சொந்தமாக வார்த்தைகளைக் கண்டுபிடித்து வெளிப்படுத்தப் பழக்குங்கள்.
- பிள்ளைகளுடன் சேர்ந்து சிறுவர்பாடல்கள், கவிதைகள் ஆகியவற்றைப் பாடுங்கள்.

**குறிப்பு 2: ரசித்து வாசிக்கப் பழக்குங்கள்**

வாசிப்பதும், மற்றவர்களுக்கு வாசித்துக் காட்டுவதும் முழுக் குடும்பத்தினரையும் மகிழ்வூட்டும் செயலாகும். கீழுள்ள குறிப்புகள் உங்கள் பிள்ளைகள் வாசிக்கப் பழகுவதற்கு உதவும்.

- பிள்ளைகளுக்கு விருப்பமான கதைகளை வாசித்துக்காட்டி அவர்களுக்கு பிடித்தமான கதைகளைத் தெரிவுசெய்யுங்கள்.
- அவர்களுக்கு கதைகள் வாசித்துக்காட்டும் போது, மீண்டும் ஒரே மாதிரி வசனங்கள் வரும்போது அவர்களையும் உங்களுடன் சேர்ந்து வாசிக்கப் பழக்குங்கள்.
- வாசிக்கும் போது பிள்ளைகளுக்கு சொற்களைத் தெளிவுபடுத்துங்கள. இது பேச்சுவழக்கிற்கும், எழுத்துவழக்கிற்கும் உள்ள தொடர்பை உருவாக்க உதவும்.
- வித்தியாசமான பிரதிகளிலிருந்து வாசித்துக்காட்டுங்கள். உ+ மாக: கதைகள், கவிதைகள், பத்திரிகைகள், விளம்பரங்கள், பகிடிக்கதைகள்.
- பிள்ளைகள் மறுநாள் காலை விடிய எழும்பத் தேவையில்லாவிடின், முதன்நாளிரவை வாசிக்கும் இரவாக தீர்மானியுங்கள். நீண்ட நேரம் விழித்திருந்து வாசிக்க விடுங்கள். கட்டிலில் படுத்திருந்தும் வாசிக்கலாம்.
- உறவினர்கள் தெரிந்தவர்களைப் பிள்ளைகளுக்கு புத்தகங்களை அன்பளிக்க ஊக்குவியுங்கள்.
- பிள்ளைகளுடன் சேர்ந்து நூலகத்திற்குச் செல்லுங்கள்
- பிள்ளைகளை சிறுவர் புத்தகங்களுக்கு சந்தாதாரர் ஆக்குங்கள்.

**குறிப்பு 3: தினமும் வாசியுங்கள்**

பிள்ளைகள் ஒழுங்கு முறையை விரும்புபவர்கள். வாசிப்புப் பழக்கம் தான் உங்களையும் பிள்ளைகளையும் ஒன்றாக மகிழ்வுபடுத்தும் செயலாகும். இதற்காக நேரமொதுக்கி நீங்கள் வாசித்தல், முக்கியமானதும், மகிழ்வையும் உருவாக்கும் என்பதை உங்கள் பிள்ளைகளுக்குக் காட்டுங்கள்.

- குழந்தைப் பருவத்திலேயே பிள்ளைகளுக்க வாசித்துக் காட்டுங்கள்.
- நீங்களும் பிள்ளைகளும் சேர்ந்து வாசிக்க தினமும் ஒரே குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்குங்கள்.
- இருந்து வாசிக்க அமைதியான, வசதியான இடத்ததை ஒதுக்குங்கள்.
- வித்தியாசமான புத்தகங்களைத் தெரிவுசெய்யுங்கள்.
- பிள்ளைகள் கதையைக் கேட்டு மனதில் படமாகப் பதித்து மீண்டும் சொல்லக்கூடியதாக மெதுவாக வாசியுங்கள்.
- பிள்ளைகள் வாசிக்கக் கற்றாலும் கூட, அவர்களுக்குத் தொடர்ந்தும் வாசித்துக்காட்டுங்கள் அவர்கள் தாமாக விரும்பி ஒரு மந்திர வாசிப்புலகில் சஞ்சரிக்கும் வரை உதவுங்கள்.

**குறிப்ப 4: பிள்ளைகளுக்கு முன்மாதிரியாயிருங்கள்**

பெற்றோர்தான் பிள்ளைகளுக்கு முன்னுதாரணம். நீங்கள் வாசித்து ரசித்து மகிழ்ந்தவற்றைப் பிள்ளைகளுக்கு சொல்லும் போது, பிள்ளைகளும் வாசிப்பின் முக்கியத்துவத்தை உணர்வார்கள்.

- செய்முறைகள், பக்கற்றுக்களின் விளக்கங்கள், விளம்பரங்கள், சஞ்சிகைகளை சத்தமிட்டு வாசியுங்கள்.
- பிள்ளைகளுடன் சேர்ந்து, போக்குவரத்து அடையாளங்கள், சிறுகுறிப்புகள், கடைகளின் பெயர்ப்பலகைகள், விளம்பரங்களை வாசியுங்கள்.
- சமையல் புத்தகங்கள், தொலைபேசிபுத்தகங்கள், உலகப்படங்கள், அகராதிகள் ஆகியவற்றை சேர்ந்து பாவியுங்கள்.
- நண்பர்கள், உறவினர்களுடைய கடிதங்கள் ஈ–மெயில் காட்டுகள் ஆகியவற்றை பிள்ளைகளுடன் சேர்ந்து வாசியுங்கள்.

**குறிப்பு 5: புத்தகங்கள் பற்றி கதையுங்கள்**

வாசிப்பதைப் போலவே புத்தகங்கள் பற்றியும் பேசுங்கள். அதனால் பிள்ளைகள் தமது அன்றாட அனுபவங்களை புதுச்சொற்களைப் பயன்படுத்திப் பேச்சுவளத்தை மேன்படுத்த சந்தர்ப்பங்கள் உள்ளன.

- பிள்ளைகள் எந்தப் புத்தகங்களைப் படிக்க விரும்புகிறார்கள் என்பதைக் கேளுங்கள்.
- உங்கள் சிறுவயதில் படித்த, விருப்பமான புத்தகத்தைப் பற்றி பிள்ளைகளுக்கு விளக்குங்கள்.
- ஒரு கவிதை வாசித்துக் காட்டும் போது அடுத்த வரி எப்படி வருமென்று அவர்கள் ஊகத்தைக் கேளுங்கள்.
- கதைகள் வாசிக்கும் போது பிள்ளைகளை கேள்வி கேட்க ஊக்குவியுங்கள்.
- பிள்ளைகளை எழுத்தாளர்கள் பற்றி விமர்சனம் செய்யப் பழக்குங்கள். பிள்ளைகள் எழுத்தாளரின் கருத்துடன் உடன்படுகிறார்களா என விசாரியுங்கள்
- வாசிப்பதை இடைநிறுத்தி கேள்விகள் கேட்பதன் மூலம் விளங்கிக்கொண்டார்களா என தெளிவுபடுத்துங்கள்.
- வாசித்த கதையை மீண்டும் சிந்திக்க நேரம் கொடுத்து சில நாட்களால் அதுபற்றிய கேள்விகள் கேளுங்கள்.
- வாசித்த கதையைப் பற்றி பிள்ளைகளுடன் பேசுவதன் மூலம் அவர்கள் தெளிவாக விளங்கிக்கொண்டார்களா என அறியுங்கள்.

**குறிப்பு 6: பிள்ளைகள் வாசிக்கும் போது கேளுங்கள்**

நாம் பிள்ளைகள் வாசிப்பதைக் கேட்கும் போது அவர்கள் தமது வாசிப்புத்திறமையைக் கூட்டுவார்கள். எமது கவனமும் அதன் பிரதிபலிப்பும் அவர்கள் திறமையை மேம்படுத்தும்.

- பிள்ளைகள் வாசித்துக் காட்டிய கதை உங்களுக்குப் பிடித்ததாகவும், அதிலிருந்து கேள்விகளையும் எழுப்புங்கள்.
- பிள்ளைகளுக்கு நேரம் கொடுத்து கடினமான சொற்களை எழுத்துக்கூட்டி தாமாகவே வாசிக்க விடுங்கள்.
- நீங்கள் வாசித்துக் காட்டும் போதோ அல்லது பிள்ளைகள் வாசிக்கும் போதோ இடைஞ்சல் இல்லாமல் பார்த்துக்கொள்ளுங்கள்.
- உங்கள் பிள்ளைகள் மிகவும் கடினமான வசனங்களை வாசிக்கத் தெரிவுசெய்வதைத் தவிருங்கள்.
- பிள்ளைகள் வாசிக்கும் போது அவர்களிடம் இருந்து மாற்றி நீங்களும் சேர்ந்து வாசியுங்கள்.

**குறிப்பு 7: பிள்ளைகளின் வாசிப்புத்திறமையைப் பாராட்டுங்கள்**

வாசிக்கப் பழக நீண்ட காலம் தேவை. அதற்கு ஆசிரியர் பெற்றோரின் பழக்குதலும் உதவியும் தேவை.

- பிள்ளைகளின் வாசிப்புத்திறமையை மெச்சுங்கள்.
- பிள்ளைகளுக்கு தேவையான புத்தகங்களைக் தேடிக் கொடுங்கள்(நூலகம்)

**நீங்கள் மட்டும் தனியாள் அல்ல**

பெற்றோர் மட்டுமல்ல பிள்ளைகளின் சகோதரர்கள் குடும்ப உறவினர்களும் கூட வாசிப்புத்திறமைக்கு உதவலாம். நீங்கள் பிள்ளைகளுக்கு உதவுவது பற்றி ஆசிரியருடன் பேசுங்கள். உங்கள் ஊக்கம் பிள்ளைகளைப் பாடசாலையில் நல்ல முன்னேற்றத்தைக் கொண்டுவர உதவும்.